# PG TRB HISTORY UNIT VII

## பண்டைத் தமிழகம்

- சங்க காலம் கி.மு. 500 - கி.பி. 500(அ) கி.மு. 300- கி.பி. 300
- களப்பிரர் காலம் கி.பி. 250- கி.பி. 550
- பல்லவர் காலம் கி.பி. 575- கி.பி. 900
- முற்கால பாண்டியர்கள் கி.பி. 575- 920
- பிற்கால் சோழர்கள் கி.பி. 850- கி.பி. 1280
- பிற்கால பாண்டியர்கள் காலம் கிபீ. 1190- 1310
- இமயம் முதல் குமரிவரை பரவியுள்ள இந்திய நாட்டை அழைப்பது - பழம்பெரும் நாடு∴ பாரததேசம்
- உலகிலேயே மிகத்தொன்மையானது என வரலாற்று அறிஞர்களால் கூறப்படும் இந்தியாவின் பகுதி- விந்திய மலைக்கு தெற்கிலுள்ள பகுதி ( தக்காணப்பீடபூமி)
- புவி உருவானபோதே தோன்றிய இந்தியாவின் நிலப்பகுதி - தக்காணபீடபூமி
- தென்னாட்டில் மக்கள் பேசும் மொழிகள் - தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு
- திருப்பதி மலைக்கு தெற்கில் வாழும் மக்கள் பேசும் மொழி - தமிழ்
- நன்னூலை இயற்றியவர் யார் - பவணந்தி முனிவர்
- ஆங்கிலேயர் ஆட்சியில் தென்னாட்டின் பெரும் பகுதி - சென்னை மாகாணம்
- சென்னை மாகாணம் தமிழ்நாடு என பெயர் மாற்றம் பெற்றது - 1967 ஆண்டில் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணாவால்
- நாம் பேசும் தமிழை இவ்வாறு அழைப்பர் - செந்தமிழ், பைந்தமிழ், முத்தமிழ்
- பண்டைக்காலத்தில் சங்க காலத்தில் தமிழகத்தை ஆட்சி புரிந்தவர்கள் - மூவேந்தர்கள் ( சேர, சோழ, பாண்டியர்கள்)
- குமரிகண்டம் எனப்படுவது - குமரி முனைக்கு தெற்கே உள்ள 'இந்துமாக்கடல் பகுதி"
- பண்டை குமரிக்கண்டத்தில் ஓடிய ஆறு - பருளி ஆறு
- பண்டைய அரசாக கருதப்படுவது - பாண்டியர் அரசு
- முச்சங்கங்கள் செயல்பட்ட இடம் - மதுரை
- தலைச்சங்கம் (முற்சங்கம் செயல்பட்டது) - தென்மதுரை
- இடைச்சங்கத்தின் தலைநகரம் - கபாடபுரம்
- கடைச்சங்கத்தின் தலைநகரம் - இன்றைய மதுரை
- சங்கம் வைத்து தமிழ் வளர்த்தவர்கள் - பாண்டியர்கள்
- தமிழ் வளர்த்த புலவர்களின் கடைச்சங்கம் நடைபெற்றது - மதுரை மூதூரில் ∴ இன்றைய மதுரையில்
- 'கூடல்" என்றழைக்கப்பட்ட நகரம் - மூதூர் ∴மதுரை
- தமிழ் மொழியின் வளத்தைப் பெருக்கும் இலக்கியம் வளர்த்த தலை, இடை, கடை சங்கங்கள் மூன்றும் வளர்த்தவர்கள் - பாண்டியர்கள்
- மூன்று சங்கங்களும் நீண்ட காலம் 9990 ஆண்டுகள் நடைபெற்றது.
- கடற்கோளால் மூழ்கிப்போன பெரும் நிலப்பரப்பு - லெமூரியா கண்டம்
- பரிணாம வளர்ச்சி அடிப்படையில் மனித இனம் முதன் முதலில் உலகில் தோன்றிய இடம் - குமரிக்கண்டம் ( லெமூரியாக் கண்டம்)
- முதன் முதல் மாந்தரினம் பேசிய மொழி - தமிழ்
- குமரிக்கண்டத்தில் வாழ்ந்த மக்கள் இனத்தவராக கருதப்படுவர் தென்னாட்டில் ∴ தென்னிந்தியாவில் வாழ்வோர், தமிழ் நாட்டில் வாழ்வோர்
- குமரிக்கண்டத்திற்கு முன்பு இருந்த கண்டம் - லெமூரியா கண்டம்
- ஆப்பிரிக்காவையும், ஆஸ்திரேலியாவையும் இணைத்த பெரிய கண்டமாக இருந்தது -லெமூரியா கண்டம்
- லெமூர் என்பது - குரங்கு இனம், லெமூர் என்னும் குரங்கினத்தின் பெயரால் 'லெமூரியா" என்றழைக்கப்பட்டது.

- உலகில் முதல் மனிதன் பிறக்கக் காரணமான நிலப்பகுதி - லெமூரியா
- குமரிக்கண்டம் ∴ லெமூரியா கண்டத்தில் மாந்தரினம் பேசிய முதல் மொழி - தொல் தமிழ்
- தொல் தமிழ் பேசிய மக்கள் வழி வந்தவர்கள் வாழும் நிலம் - தமிழ்நாடு வரலாற்றுக்காலம் என்பதன் தொடக்கம் - சங்ககாலம்
- சங்க காலம் குறிப்பது - கடைச்சங்கத்தை
- சங்ககாலம் ∴ கடைச்சங்கம் செயல்பட்ட காலம்
  தி.மு ஆண்டு 300 முதல் தி.பி 300 வரை ( 600 ஆண்டுகள் எனவும் கருத்துண்டு)
- திருவள்ளுவர் பிறந்த ஆண்டு கி.மு 31
  தி.மு என்றால் - திருவள்ளுவர் பிறப்பதற்கு முன்
  தி.பி என்றால் - திருவள்ளுவர் பிறப்பதற்கு பின்
- சங்க இலக்கியம் என்பது - எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் பதினென்கீழ்கணக்கு நூல்களும்
- சங்க இலக்கியங்களை இயற்றிய புலவர்கள்
- கபிலர், பரணர், ஔவையார், நக்கீரர் போன்ற பலநூறு புலவர்கள்
- கடைச்சங்கத்திற்கு முன்னரே தோன்றிய இலக்கணநூல், தமிழில் தோன்றிய முதல் இலக்கண நூல் - தொல்காப்பியம்
- அனைத்து சமயத்தாலும் வியந்து போற்றும் நூல் - சங்ககாலத்தில் தோன்றிய அனைத்து சமயத்தாரும் வியந்து போற்றும் நூல் - திருக்குறள்
- நமது தாய்மொழி தமிழ் இலக்கண வரம்பு கொண்டு வளர்ந்ததால் 'செந்தமிழ்" என வழங்கப்பட்டது.
- பிற மொழிகளின் துணையின்றி வளரும் திறன் பெற்றது - தமிழ்
- தமிழை அறிஞர்கள் குறிப்பிடுவது - உயர்தனிச் செம்மொழி
- கடலில் செல்லும் கலங்களை கட்டும் பெயர்கள் - நாவாய், வங்கம், கலம், கப்பல், தோணி, ஓடம், படகு, தெப்பம், கட்டுமரம்
- சங்ககாலத்தில் சிறப்பு பெற்ற துறைமுகங்கள் : சேரர் - தொண்டி, முசிறி, சோழர் - புகார், பாண்டியர் - கொற்கை. புகார் என்பது காவிரிப்பூம்பட்டினம்
- பண்டைக்காலத்தில் தமிழகம் பண்டமாற்று வணிகம் செய்த நாடுகள் - எகிப்து, யவனம், ரோம், சீனம்
- சங்ககாலத்தில் தமிழ்ப்புலவர்கள் நிலத்தை 5 வகை இயற்கைப் பிரிவுகளாகப் பிரித்தனர்.
- மலையும் மலைசார்ந்த நிலமும் - குறிஞ்சி
- காடும் காடு சார்ந்த நிலமும் - முல்லை
- வயலும் வயல் சார்ந்த இடமும் - மருதம்
  (நீர் வளத்துடன் வயல் சூழ்ந்த பகுதி )
- கடலும் கடல் சார்ந்த இடமும் - நெய்தல்
  (கடற்கரைப் பகுதிகளும்)
- கடும் வறட்சிக்கு உள்ளாகித்திரிந்த நிலம் - பாலை
  (மணலும் மணல் சார்ந்த நிலம்)
- சங்காலத்தில் உலகோர்க்கு உணவளிக்கும் உயர்ந்த தொழிலாகக் கருதப்பட்டது - உழவுத்தொழில்
- சங்ககால பாண்டியர்களுள் பெருமை வாய்ந்தவர்கள் - தலையாளங்கானத்து செருவென்ற நெடுஞ்செழியன்
- தலையாளங்கானத்து போரில் தமிழக அரசர் ஏழு பேரை வென்றவர் -தலையாளங்கானத்து செறுவென்ற நெடுஞ்செழியன்
- சங்ககால சேரர்களில் தலைசிறந்தவன் - சேரன் செங்குட்டுவன்
- இமயம் வரை சென்று வெற்றிக்கொடி நாட்டிய சேர மன்னர்கள் - இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், சேரன் செங்குட்டுவன்
- சங்ககால சோழ மரபில் வந்தவர்களுள் தலைசிறந்தவன் - கரிகாற் பெருவளத்தான்
- ஈழத்தை வென்று அந்நாட்டவரை கைது செய்து அவர்களைக் கொண்டு காவிரி நதிக்கு கரை கட்டியவன் - கரிகாலன்
- கல்லணையைக் கட்டியவன் - கரிகாலன்

- ‘பெருவளத்தான் “ எனப்பட்டவன் - கரிகாலன்
- சங்ககாலத்தில் குறுநில மன்னர்களாக விளங்கியவர்கள் - கடையேழு வள்ளல்கள்
- கடையேழு வள்ளல்கள் - பாரி, ஓரி, காரி, நள்ளி, எழினி, பேகன், ஆய் அண்டிரன்
- சங்ககாலத்தில் காதல் அடிப்படையில் மனவாழ்க்கை அமைந்தது. கூாதலா் இருவா் கருத்தொருமித்து இல்லறத்தில் ஈடுபட்டதை பெற்றோர்கள் ஏற்றனர். திருமணத்தில் சமயசடங்குகள், வேள்வித்தீ, வடமொழி மந்திரம் இடம்பெறவில்லை.
- சங்ககாலத்தில் கோயில்கள் கட்டப்படவில்லை
- திருக்கோயில்கள் கட்டும் முறை வளராத காலம் - சங்ககாலம்
- சங்ககால தமிழர்கள் வழிபட்டது - நடுகல்
- போரில் ஈடுபட்டு வீரமரணம் அடைந்தவர்கள் நினைவாக வைப்பது - நடுகல்
- வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் கன்னியாகுமரிக்கும் இந்துமாக்கடலுக்கும் இடையில் அமைந்திருந்த பெரும் நிலப்பரப்பு - குமரிக்கண்டம்
- மனித இனம் முதன்முதலில் தோன்றியதாக கருதப்படும் இடம் - லெமூரியா
- தமிழ்ப்புலவர்கள் கூடி இலக்கிய ஆய்வு செய்த பண்டைய தமிழக அமைப்பு -கடைச்சங்கம்
- குமரிக்கண்ட மாந்தர்களின் வழிவந்த இனப்பிரிவினரே - தமிழர் ( தென்னாட்டில் வாழ்வோர்)
- தமிழ்நாட்டின் வரலாற்றுக்காலம் என்பது - சங்ககாலத்தில் தொடங்கியது
- கடைச்சங்ககாலத்திற்கு முன்னரே தோன்றிய இலக்கண நூல் - தொல்காப்பியம்
- சங்ககாலத்தில் உயர்ந்து விளங்கிய தொழில் - உழவுத்தொழில்
- பொருத்துக:

  1. தொல்காப்பியம் - அ. யானோ அரசன் யானே கள்வன்
  2. முல்லை - ஆ. நடுகல்
  3. பாண்டியர் - இ. மலையும் மலை சார்ந்த இடமும்
  4. வீரமரணம் - ஈ. கடலும் கடற்கரைப்பகுதியும்
  5. குறிஞ்சி - உ. கடைச்சங்கத்திற்கு முற்பட்டது
  6. நெய்தல் - ஊ. காடும் காடு சார்ந்த இடமும்

  விடை: 1)உ 2) ஊ 3)அ 4)ஆ 5)இ 6)ஈ
- சிலப்பதிகாரத்தில் இடம் பெற்ற பெருமைக்குரியவன் யானோ அரசன்? யானே கள்வன் எனக்கூறி வளைந்த தன் செங்கோலை நிமிர்த்துமாறு உயிர் நீத்தவன்- நெடுஞ்செழியன் (ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்)

**<u>தமிழ்நாட்டின் பண்பாட்டு மரபுகள்</u>**

( வேதகால நாகரிகத்திற்கு முன்பு சிந்து சமவெளிப் பகுதியில் வளர்ந்த நாகரிகம் - திராவிட நாகரிகம்)

- ஆரியர்கட்கு பின் திராவிட நாகரிகத்தின் மையமாக மாறிய பகுதி - தமிழகம்
- தென்னிந்தியப் பகுதிகளை திரமிளா, திராவிட ஆகிய சொற்களால் குறிப்பிடுவது - பாலிமொழியும், சமஸ்கிருத இலக்கியமும்
- பாலி, சமஸ்கிருத இலக்கியங்கள் வட நாட்டை அழைப்பது - ஆரியவர்த்தம்
  தென்னாட்டை அழைப்பது - திராமிளா மற்றும் திராவிட
- தொல் பழமையானவை எது - தமிழ்மொழியும், தமிழ் இலக்கியமும்
- மாமூலனார் சங்ககாலப்புலவர்
- மாமூலனார் கி.மு. 4ம் நூற்றாண்டில் வாழ்ந்த நந்தர்கள், மௌரியர்களின் சமகாலத்தவர்.
- தமிழ்மொழியின் காலம் - சுமார் 2500 ஆண்டுகளுக்கு மேல்
- தமிழ்மொழி பன்முக இலக்கிய வளத்தாலும், பழமையாலும் தரத்தில் உயர்ந்து - செம்மொழி தகுதியைப்பெற்றுள்ளது.
- தென்னிந்தியாவில் திராவிட மொழிகளில் மூத்த மொழி - தமிழ்மொழி
- சங்க காலத்தில் மலைசார்ந்த நாடுகளை ஆட்சி புரிந்தவர்கள் - குறுநில மன்னர்கள் (அ) வேளிர்கள்
- பொதிய மலையை ஆண்ட சங்க கால குறுநில மன்னர்- ஆய் அண்டிரன்

- குதிரை மலையை ஆய்டவன்.'.தகடூரை ஆண்டவன் - அதியமான்
- பரம்பு மலைப்பகுதியை ஆண்ட குறுநில மன்னர் - பாரி
- சங்க காலத்தில் வளமான ஆற்றுச் சமவெளியை ஆட்சி புரிந்தவர்கள் முடிவுடை மூவேந்தர்கள் சேர, சோழ, பாண்டியர்கள்
- சங்க காலத்தில் (மன்னர்களே) கவிதை இயற்றும் திறமைபெற்ற மன்னன் - ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்
- சங்க காலத்தில் புகழ்பெற்ற மன்னர்கள். சேரர்களில் தலைசிறந்தவன் - சேரன் செங்குட்டுவன்
  சோழர்களின் தலைசிறந்தவன் - கரிகாட் சோழன்
  பாண்டியர்களின் தலைசிறந்தவன் - தலையாலங்கானத்து செருவென்ற ஆரியப்படைகடந்த
- மதுரையில் திராவிட சங்கத்தை ஏற்படுத்தியவர் - வஜ்ஜிரநந்தி (கி.பி. 470)
- வஜ்ஜிர நந்தி ஒரு சமணத்துறவி
- உரையூரை ஆண்ட புகழ்பெற்ற களப்பிர மன்னன் - அச்சுத விக்கிராந்தா
- களப்பிரர் ஆட்சியை வட தமிழகத்தில் முடிவுக்கு கொண்டுவந்தவர் - பல்லவர்கள் ( கி.பி. 575 சிம்மவிஷ்ணு)
- தென் தமிழகத்தில் களப்பிரர் ஆட்சியை முடிவுக்கு கொண்டுவந்தவர்கள் - பாண்டியர்கள், கி.பி. 575, கடுங்கோன்
- சிம்மவிஷ்ணு, முதலாம் மகேந்திரவர்மன், முதலாம் நரசிம்மவர்மன் போன்றோர் - பல்லவ மன்னர்கள் ஆவர்.
- தமிழகத்தில் சாளுக்கியர், இராஷ்டிரக்கூடர்களை வென்று ஒரு பெரும் பேரரசை உருவாக்கியவர்கள் - பல்லவர்கள்
- பல்லவர்கள் ஆதரித்த சமயம் - சைவ, வைணவ சமயம்
- தமிழகத்தில் சைவ, வைணவ ஆலயங்களை அமைத்தவர்கள் - பல்லவர்கள்
- தென்பகுதியில் அரசியல் ஒற்றுமையை உருவாக்கியவாகள் - பாண்டியர்கள்
- சோழர்களின் ஆட்சி ஏற்பட்ட இடம்- தஞ்சை
- இராஜேந்திர சோழன் படையெடுத்த நாடு : கடாரம், வங்கம்
- சோழ மன்னர்கள் சைவ சமயத்தை ஆதரித்தனர்
- சைவகோயில்களைக் கட்டியவர்கள் - சோழர்கள்
- பிரகதீஸ்வரர் ஆலயம் அமைந்துள்ள இடம் - தஞ்சை, முதலாம் இராஜராஜன் கட்டினார்.
- கங்கை கொண்ட சோழபுறத்தில் கங்கை கொண்ட சோழீசுவரம் சிவன் கோயிலை கட்டியவன் - முதலாம் இராஜராஜன்
- சோழ மன்னர்கள் வாணிபத் தொடர்புகொண்டிருந்த தொலைதூர நாடுகள் - ஸ்ரீவிஜயம், சீனா
- போசாளர்கள் (ஹொய்சாளர்கள்) எழுச்சி பெற்ற பகுதி- துவார சமுத்திரம்
- சங்க கால அரசு மன்னராட்சி முறையில் அமைந்திருந்தது
- சங்க காலத்தில் அரசவை அவை, மன்றம், நாளவை, பொதியல் என அழைக்கப்பட்டது.
- கடம்பர்களை வென்ற சேர மன்னன் - சேரன் செங்குட்டுவன்.
- சிங்கள படையெடுப்பை நடத்திய சோழ மன்னன் - கரிகாலன்
- சங்க காலத்தில் மண்டலம், கோட்டம், ஊர் என்ற உள்ளாட்சி நிர்வாகப் பிரிவுகள் இருந்தன.
- சங்க காலத்தி ' கிராமங்களை நிர்வகித்தது - முதியோர் அவை
- சங்க காலத்தில் பேரூர் என்பது - பெரிய நகரங்கள்
- ஊர்கள் என்பது - கிராமங்கள்
- நகரங்கள் என்பது - வியாபார நகரங்கள்
- பட்டினங்கள் என்பது - கடற்கரை நகரங்கள்
- பிராமணர்கள் குடியிருந்த கிராமங்கள் - பிரம்மதேயம்
- சங்க காலத்தில் பிராமணர்களில் நிர்வாகம் செய்யப்பட்டது - மகாசபைகள்
- மகாசபையின் பொற்காலம் - சோழர்கள் காலம்
- சங்க கால தமிழரின் சமூக நிலை விவரிக்கபட்டுள்ள இலக்கியம் - தொல்காப்பியம் - பொருளதிகாரத்தில்
- சங்க காலத்தில' தமிழகத்தில் சாதிமுறை காணப்படவில்லை.

மலையும் மலையைச் சார்ந்த பகுதி - குறிஞ்சி
காடும் காடு சாாந்த பகுதி - முல்லை
வயலும் வயல் சார்ந்த பகுதி - மருதம்
கடலும் கடல் சாாந்த பகுதி - நெய்தல்
மழையின்றி வளம் குன்றி வரண்டுபோன பகுதி - பாலை
சங்க காலத்தில் தமிழகத்தில் நிலப்பகுதிகள் ஐவகை திணைகளாக பிரிக்கப்பட்டிருந்தன.

- சங்க காலத்தில் குறிஞ்சி நிலப்பகுதியில் வாழ்ந்த மக்கள் - குறவர் (அ) வேடர்
 முல்லை நிலத்தில் வாழ்ந்த மக்கள் - இடையர் (அ) ஆயர், ஆய்ச்சியர்
 மருத நிலத்தில் வாழ்ந்த மக்கள் - உழவர், உழத்தியர்
 நெய்தல் நிலத்தில் வாழ்ந்த மக்கள் - பரதவர்(அ) மீனவர்
 பாலை நிலத்தில் வாழ்ந்த மக்கள் - கள்ளர்(கொற்றவர்)
 சங்க காலத்தில் பாணர் என்பவர் - பாடகர்
 விரலியர் என்பவர் - நடனம் ஆடுபவர்
- சங்க காலத்தில் உப்பு வணிகம் செய்தவர் - உமணர் என அழைக்கப்பட்டார்
- துணி துவைப்பவர் - வண்ணார்
- மட்பாண்டம் செய்பவர் - குயவர்
- சங்க காலத்தில் காதல் திருமணங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டது
- சங்க காலப் பெண்கள் தங்கள் உயிருக்கும்மேலாக மதித்தது - கற்பு
- சாதி முறை தமிழகத்தில் கடுமையாக்கப்பட்டது - பல்லவர் காலம்
- தீண்டாமை கடுமையாக்கப்பட்டது - பல்லவர் காலம்
- சாதி முறையில் வலங்கை, இடங்கைப் பிரிவுகள் தோன்றியது - சோழர் காலத்தில் (வலங்கை -98 , இடங்கை - 98 சாதிகள் மொத்தம் 196 சாதிகள்)
- சாதியைப் பற்றி குறிப்பிடப்பட்ட சங்க கால இலக்கியங்கள் - நாலடியார், திருக்குறள்
- சங்க கால தமிழர்கள் - ஒழுக்க நெறி (அ) நன்னெறி யை மதித்தனர்
- சங்க இலக்கியங்கள் மதச்சார்ப்பற்றவை
 காரணம் - தங்களுக்கு எந்த ஒரு தெய்வீகத் தன்மையையும் கூறிகொள்ளாதவை
- தொல்காப்பியம் ஒரு இலக்கண நூல்.
- இரட்டைக்காப்பியம் என்பது - சிலப்பதிகாரம், மணிமேகலை
- சங்க இலக்கியங்களில் காதலும், வீரமும் பற்றி பேசப்படுபவை - எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்கள்
- சங்க இலக்கியங்கள் என்பது - பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினென்கீழ்கணக்கு, இரட்டைக்காப்பியம்
- பதினென் கீழ்கணக்கு நூல்கள் வலியுறுத்துவது - ஒழுக்கம், (அ) நீதி
- ஐம்பெருங்காப்பியம், ஐஞ்சிறுகாப்பியங்கள், பிங்கலநிகண்டு, யாப்பெருங்காலம் இலக்கியம் இயற்றப்பட்டது - களப்பிரர் காலம்
 (மதச்சார்ப்பற்ற இலக்கியங்கள் - நந்திக்கலம்பகம், மூவருலா, கலிங்கத்துப்பரணி, நன்னூல், வீரசோழியம்)
- சோழர்கள் தமிழ்கல்விக்கு புலவர் முற்றூட்டு மூலமாக ஆதரவளித்தனர்.
- பல்லவர் காலத்தில் ஆட்சிமொழி - சமஸ்கிருதம்
 (சமஸ்கிரு மொழி இலக்கியங்கள்- மத்தவிலாசப் பிரகசனம், கிருதார் ஜீனியம், அவந்தி சுந்தரி கதை, காவியதர்சம்)
- சமஸ்கிருதம் கற்பிக்கும் பிராமணர்கட்கு வழங்கப்பட்ட வரிவிலக்கு நிலங்கள் - பட்டவிருத்தி, வேத விருத்தி
- சங்க காலத்தில் வழிபாட்டு முறைகள் - திணை அடிப்படையில் அமைந்திருந்தன.
- வீரகற்கள் வழிபாடு இருந்தது - சங்க காலம்
 (சங்க கால மக்கள் வழிபட்ட தெய்வங்கள் - சேயோன், மாயோன், வேந்தன், வருணன், கொற்றவை)
- சங்க காலத்தில் - கணேசர் வழிபாடு(பிள்ளையார், விநாயகர்) வழிபாடு காணப்படவில்லை
- சங்க காலத்தில்வழிபாட்டில் இடம்பெற்ற ஆடல் பாடல் - வெறியாட்டு, குரவைக்கூத்து

- பக்தி இயக்கம், சிறப்பான இடத்தைப்பெற்றது - பல்லவர் காலம்
- சிவன், திருமால் முதன்மை தெய்வங்களானது - பல்லவர் காலம்
- சோழர் காலத்தி**ன்** இறுதியில் முருக வழிபாடு புகழ்பெற்றது
- கோவில்களில் பிராமணர்கள் பூசாரிகளாக மாறியது- சமஸ்கிருதம் சமய மொழியானது சோழர் காலம் (பிற்கால சோழர் காலம்)
- சிதம்பரம் கோவிலில் இருந்த தில்லைகோவிந்தராசர் சிலை அகற்றப்பட்டது, வைணவர் ராமானுஜர் நாட்டை விட்டு அகற்றப்பட்டதும் - சோழர் காலத்தில்
- மரபு சார்ந்த இசை மற்றும் நடனக் கலைஞர்கள் என்பவர்கள் - பாணர்கள், விராலியர்
- யாழ் என்பது ஒரு - நரம்புக்கருவி
- குழல் என்பது - காற்றுக்கருவி
- முழவு என்பது - தோல் கருவி
- உருத்திராச்சாரியார் என்ற புகழ்பெற்ற இசைக் கலைஞரைப்பற்றி கூறும் கல்வெட்டு - பல்லவர்கால குடுமியான் மலைக்கல்வெட்டு
- சங்க கால கட்டடங்கள் கட்ட பயன்படுத்தப்பட்ட பொருட்கள் - செங்கல், மரம்
- பாறைக் குடைவரைக்கோயில்களை தமிழகத்தில் அமைத்தவர்கள் - பல்லவர்கள்
- பல்லவர்கள் அமைத்த பாறைக் குடைவரைக்கோயில்கள் மாமல்லபுரம் - மிகிஷாசுர மண்டபம் , வராக மண்டபம்
- பல்லவர்கள் அமைத்த ரதக்கோயில்(அ) ஒற்றைக்கல் கோவில் - மாமல்லபுரம் , பஞ்சபாண்டவர் இரதம்
- பல்லவர்கள் அமைத்த(கற்றளிகள்) கற்கோயில் காஞ்சி கைலாசநாதர் ஆலயம், மாமல்லபுரம் கடற்கரை கோயில்
- சோழர் கால கட்டிடங்களுக்கு எ.கா. - தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயம், கங்கை கொண் சோழீசுவரம், தாராசுரம்
- வெண்கலத்தால் ஆன நடராசர் சிலை, 63 நாயன்மாகள் சிலைகள் உருபெற்றது - சோழர் காலத்தில்
- கணியன் என்பவர் - வானவியல், ஜோதிடவியல் வல்லுநர்
- சித்த வைத்திய முறையில் தேர்ச்சிப் பெற்றவர்கள் - தமிழ் சித்தர்கள்
- 1. பட்டினம் - கடற்கரைப்பகுதி
  2. பாணர் - இசைவாணர்
  3. கூத்து - நாடகம்
  4. விரலியர் - நடனமாடுபவர்
  5. முல்லை - காட்டுப்பகுதி

**<u>தமிழக வரலாறு:</u>**

- சமீபத்தில் மதுரை மாவட்டம் 'திருமங்கலம்" அருகே மு.ஏ. மராமன் என்பவர் பெருங்கற் புதைக்குழிகளைக் கண்டறிந்துள்ளார்.
- வட ஆற்காடு மாவட்டத்தில் 'பையம்பள்ளி" என்னுமிடத்தில் புதிய கற்கால மண்பாண்டங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இது கி.மு. 1400 ம் ஆண்டைச் சார்ந்தவை
- ஆதிச்சநல்லூர், பெரும்பேர்சானூர், குன்றத்தூர் முதலான இடங்களில் பழங்காலத்தை சார்ந்த இரும்புக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன
- தமிழகத்தின் வரலாற்றுக்கால ஆதாரங்களை இராபர்ட் புரூஸ்புட் என்பவர் எடுத்துக் காட்டினார். 1000 புதிய கற்கருவிகளை அவர் இனம் கண்டு பிரித்தார்
- சங்கம் மருவிய கால இலக்கியங்கள் - சிலப்பத்திகாரம், மணிமேகலை, இவை இரட்டைக் காப்பியங்கள்.
- தொல்காப்பியம் என்னும் இலக்கணநூல், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, ஆகிய நூல்களுக்கெல்லாம் காலத்தால் முற்பட்டது.
- இரட்டைக்காப்பியத்தின் காலம் - கி.பி. 6ம் நூற்றாண்டுக்கு முற்பட்டது என்பது பொதுக்கருத்து
- தமிழரின் வீரத்தையும், போர் ஆற்றலையும், அரசியல் வரலாற்றையும் அறிய உதவுவது - நடுகற்காலங்கள்

- சித்தன்னவாசல் ‘குகைக்கோயில்” ஓவியங்கள் புதுக்கோட்டையில் உள்ளது
- தமிழகத்தில் கிடைத்துள்ள மிகத்தொன்மை வாய்ந்த எழுத்துக்கள் தமிழி எனப்படுகிறது. இவை ‘பிராமி” எழுத்திலிருந்து தோன்றியது என ஐ. மகாதேவன் - கூற்று
- பிராமி எழுத்துக்கள் வலமிருந்து இடமாகவும் பின் இடமிருந்து வலமாகவும் எழுதப்பெற்றது. இதுவரை கிடைத்துள்ள கல்வெட்டுகள் அனைத்தும் இடமிருந்து வலமாகவே எழுதப்பட்டுள்ளன.
- ‘தமிழி” கல்வெட்டுகள் - ர்.மு. கிருஷ்ணசாஸ்திரி- தான் முதல் முதலில் படிக்க முயன்றார்
- இவ்வெழுத்துக்களை படிக்க தெளிவாக வழிவகுத்தவர் - மு.ஏ. சுப்பிரமணிஐயர் இவர்தான் ழ,ள,ற,ன வழியினால் வாசித்தார்
- தமிழ்நாட்டில் வடமொழியை எழுதத் தொன்றுதொட்டு வழங்கிய எழுத்தை - கிரந்தம் என்பர். வடமொழியில் கிரந்தம் என்றால் நூல் என்பது பொருள்.
- கிரந்த எழுத்தகளின் முன்னோடி - வடமொழி எழுத்துக்கள்
- சங்க காலக் காசுகள் கிடைத்துள்ள இடங்கள் - மதுரை, புகார்
- சங்க கால நினைவுச் சின்னங்கள் - காவிரிபூம்பட்டினத்திற்கு அருகில் கீழையூர் என்னுமிடத்தில் பெரிய செங்கல்மேடை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- மெகஸ்தனிஸ் எழுதிய நூல் - இண்டிகா, இந்நூலில் பாண்டியர்களை பற்றிய குறிப்பு காணப்படுகிறது.
- முதன் முதலாகத் தமிழ்நாட்டைப் பற்றி குறிப்பிட்ட இந்தியரல்லாதவர் - மெகஸ்தனிஸ்
- அகஸ்டஸ் மன்னனிடம் பாண்டிய மன்னரால் அனுப்பப்பட்ட தூதுக்குழுக்களைப் பற்றி ரோமானிய நாட்டவர் - ஸ்ட்ராபோ விளக்கிக் கூறுகிறார்.
- கி.பி. 77ல் பிளினி எழுதிய நூல் - இயற்கை வரலாறு, இதன் மூலம் தமிழகத் துறைமுகங்களைப் பற்றி அறியலாம்.

- ‘பெரிபு;ஸ் ஆப் எரித்ரீயன் சீ” என்னும் நூலில் கி.பி. 80ல் தமிழகம் இருந்த நிலைபற்றி கூறப்படுகிறது. இந்நூலில் தமிழக நாட்டை ‘தமிரைக்” என்று இந்நூலாசிரியர் பெரிபு;ஸ் குறிப்பிடுகிறார்
- சங்கத் தமிழ் நூல்களில் பல்லவர்களைப் பற்றிய குறிப்பே இல்லை
- களப்பிரரைப் பற்றி அறிய கன்னட நாட்டுக் கல்வெட்டுகள் பயன்படுகின்றன
- தமிழ்நாட்டை ஆட்சி செய்தவர்களில் நீண்டகாலம் ஆட்சி செலுத்தியவர்கள் பாண்டியர்களே. சங்க காலம் முதல் கி.பி. 14ம் நூற்றாண்டு வரையில்
- புத்தமித்திரர் எழுதிய நூல் - வீரசோழியம்
- ஜெயங்கொண்டார் எழுதிய நூல் - கலிங்கத்துப்பரணி
- பாண்டியர் கால செப்பேடுகள் - சின்னமனூர், வேள்விக்குடி, ஆனைமலை, ஐவர் மலை செப்பேடுகள் குறிப்பிடத்தக்கன.
- கங்காதேவி எழுதிய நூல்கள் - முதுராவிஜயம், கொங்குதேச ராஜாக்கள் சரிதம்
- ‘இராணுவ நடவடிக்கைகள்” என்ற நூலை எழுதியவர் - இராபர்ட் ஆர்ம்
- தமிழக வரலாற்றை 6 பிரிவுகளாகப் பிரித்துக்கொள்ளலாம் .1). வரலாற்றுக்கு முற்பட்ட காலம், 2). சங்ககாலம், 3). பல்லவர்கள் காலம், 4). பாண்டியர், சோழர் பேரரசு காலம், 5) மத்திய காலம், 6) பிற்காலம்
- முதலில் பல்லவர்காலத்தில் கிரந்த மொழியில் கல்வெட்டுகள் வெளியிடப்பட்டன.
- பண்டைகால தமிழகத்து புதைப்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இடம் - ஆதிச்சநல்லூர், புதுச்சேரி
- அரிக்கமேடு அகழ்வராய்ச்சியில் கிடைத்தவை. - கி.பி. முதல், இரண்டாம் நூற்றாண்டு ரோமாபுரி நாணயங்கள் (ரோமாபுரி - தமிழகம் வணிக உறவு)

- ‘நசனிடரள ழுக வாந நுசலைவாசநையெ ளநய’ எரித்திரியன் கடலின் பெரி பு;ஸ் மூலம் அறியும் செய்தி - (கி.பி. 60ல் வெளியிடப்பட்டது) பண்டைய தமிழகம் - ரோமாபுரி இடையேயான வாணிபம் பற்றி
- சங்க காலம் முடிந்து சுமார் 300 ஆண்டுகாலம் தமிழகத்தில் என்ன நிகழ்ந்தது என அறிய முடியவில்லை ஆதலால் தமிழக வரலாற்றில் அக்காலத்தை ‘இருண்டகாலம்” ‘களப்பிரர் காலம்” என்பர்.
- களப்பிரலால் ஏற்பட்ட அரசியல் மாற்றம் பற்றி வேள்விக்குடி செப்பேடுகள் (கி.பி. 768) சான்று கூறுகின்றன.
- களப்பிரர் காலத்தில் தமிழகத்தில் சமண, பௌத்த சமயங்கள் வளர்ச்சியுற்றன.
- மதுரையில் சமண முனிவர் வஜ்ஜிரந்தி, என்பவர் தமிழ்ச்சங்கம்∴திரமிளசங்கம்∴திராவிடசங்கம் ஒன்றை கி.பி. 470 ல் தோற்றுவித்து அதன்மூலம் சமண சமய இலக்கியங்களை தமிழில் பெருக்கி எழுதினார்
- ‘அச்சுத விக்கிராந்தன்” என்ற களப்பிரக் குளத்தைச் சார்ந்தவன் பௌத்தவிகாரங்கள் அமைத்தும், பௌத்த சமய நூல்கள் இயற்றியும் புத்தசமய வளர்ச்சியை தமிழகத்தில் ஊக்குவித்தான் என்று கன்னட நாட்டு கல்வெட்டு சான்று பகிர்கின்றன.
- பள்ளன்கோயில் செப்புப்பட்டங்கள் - கி.பி. 550ல் இரண்டாம் சிம்மவர்மன் ஆட்சிகாலத்தில் 6ம் ஆட்சியாண்டில் வெளியிடப்பட்து. இதுதான் முதன் முதலாக வடமொழியும், தமிழும் கலந்து வெளியிடப்பட்ட செப்பு பட்டயமாகும்.
- சோழர் கால செப்பேடுகளில் மாபெரும் செப்பேடு திருவாலாங்காட்டுச் செப்பேடு ஆகும்
- இதுவரை தமிழகத்தில் ஏறக்குறை 25,000 கல்வெட்டுகள் இருக்கலாம்
- இசைபற்றிய ஒரு சிறந்த கட்டுரை கொண்ட கல்வெட்டு புதுக்கோட்டையிலுள்ள ‘குடுமியான் மலையில்” பொறிக்கப்பட்டுள்ளது
- சங்க காலம் முடிந்ததும் தமிழகத்தில் ஆட்சிபுரிந்தவர்கள் - களப்பிரர்கள்
- களப்பிரர் காலம் முடிந்து தமிழகத்தில் பல்லவர் காலம் தொடங்கின
- சீனப்பயணி யுவான்சுவாங்கின் குறிப்புகள் - கி.பி. 641- 642
- சிங்கள வரலாற்று நூலான மகாவம்சத்தில் தமிழகம் பற்றிய செய்திகள் உள்ளன.
- இத்தாலி நாட்டு வெனிஸ் நகரப்பயணி மார்க்கோபோலோ 1293ல் -தெற்கு இந்தியா பற்றிய குறிப்புகளைத் தந்துள்ளார்.
- சோழர் காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்கள் - பொன்
- ‘இபின்பாதுடா 1304- 1378” ஒரு முஸ்லீம் பயணி ∴மூர் நாட்டு பயணி
- புதுச்சேரிக்குஅருகில உள்ள அரிக்கமேடு பகுதியில் அகழ்வாராய்ச்சியை மேற்கொண்டவர்- மார்ட்டிமர் வீலர்- இதன் மூலம் ரோமானியப்பேரரசு - தமிழகம் வாணிபம் பற்றி கூறுகிறார் .
- வரலாற்றில் கட்டடக்கலை என்றாலே சமயக் கட்டடக்கலை என்பது பொருளாகும்
- ‘திருநெல்வேலி வரலாறு” என்ற நூல் - பிஷப் கார்டுவெல் எழுதினார்.
- ளு. கிருஷ்ணசாமி ஐயங்கார் எழுதிய நூல் - தென் இந்திய வரலாற்றின் தொடக்கங்கள்.
- பி.டி. சீனிவாச ஐயங்கார் - தமிழர் வரலாறு என்னும் நூலை எழுதினார்
- க.அ. நீலகண்ட சாஸ்திரி - சோழர்கள், பாண்டிய அரசர், தென்னிந்திய வரலாறு என்ற நூல்களை எழுதியுள்ளார்
- சு. கோபாலன் என்பவர் - காஞ்சி நகரத்துப் பல்வர்கள் என்ற நூலை எழுதியுள்ளார்
- மீனாட்சி - பல்லவர் ஆட்சியும் நிர்வாகமும் என்ற நூலை எழுதியுள்ளார்
- சு. சத்தியநாதய்யர் எழுதிய நூல் - மதுரை நாயக்கர்கள்
- விருத்திகிரீசன் எழுதிய நூல் - தஞ்சை நாயக்கர்கள்
- ஸ்ரீனிவாசாச்சாரியார் எழுதிய நூல் - செஞ்சி
- தமிழக வரலாற்றை முதன் முதலில் ஒரு சேரத் தொகுத்து ஒரே நூலில் தந்தவர் - க.அ. நீலகண்ட சாஸ்திரி
- ஆதிச்சநல்லூர் அகழ்வராய்ச்சியை மேற்கொண்டவர் - புரூஸ்‡புட்
- பிராமி கல்வெட்டு கிடைத்துள்ள இடம் - மதுரை அருகே
- அரிக்காமேடு கல்வெட்டில் ரோமன் பானை ஓடுகள் மூலம் மிகப்பழங்காலத்திலேயே தமிழகம் ரோமுடன் உறவுகொண்டிருந்தது விளங்குகிறது

- ஆலய சுவர்களில் வரலாற்றுக் குறிப்புகளை எழுதுவதைத் தமிழகத்தில் முதன் முதலில் துவக்கிவைத்தவர் - முதலாம் இராஜராஜன்
- இராஜேந்திர சோழன் பற்றி கூறும் கல்வெட்டு - திருவாலாற்காட்டு, கரந்தை பட்டயங்கள்
- கிரேக்கர்கள் தமிழகத்தை 'டமிரிகி" என்றழைத்தனர்
- கடைச்சங்க காலத்தில் எழுதியவையே - எட்டுத்தொகை, பத்துப்பாட்டு
- பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படை சங்க காலத்திற்கு பிற்பட்ட நூல் என்பது அறிஞர்கள் கருத்து
- பதினென் கீழ்கணக்கு நூல்களில் திருக்குறளும், களவழி நாற்பதும் சங்க காலத்தவை
- ஐம்பெருங்காப்பியங்களில் சிலப்பதிகாரமும், மணிமேகலையும் சங்கம் மருவிய காலத்தவை
- சங்கம் என்ற சொல் - கடைச்சங்கத்தையே குறிக்கும்
- சங்கம் என்னும் சொல் தமிழ் அன்று வடமொழிசொல்லின் மரூஉ என்பர் சிலர்
- சங்கத்தை குறிக்கும் தமிழ்ச் சொற்கள் - கூடல், சான்றோர்கள் சங்கம், மன்றம், அறிஞர்கள் அவை
- தமிழ்ச் சங்கம் (அ) கூடல் வளர்ந்த இடம் (அ) தமிழ்கெழு கூடல் என்பது - மதுரை
- சங்க காலத்தில் 'சங்கம்" (கூடல், மன்றம்) என்னும் சொல் காணப்படவேயில்லை
- தமிழ்ச் சங்கத்தைப் பற்றிய குறிப்புகள் முதன் முதலில் காணப்படுவது - இறையனாரின் களவியல் அகப்பொருள் நூலில்
- முதற்சங்கத்தின் தலைமையகம் - தென்மதுரையில்
- இதில் சிவபெருமான், அகத்தியர், முருகக்கடவுள், முரஞ்சியூர் முடிநாகமராயர் , குபேரன் முதலான 546 புலவர்கள் அமர்ந்து தமிழை வளர்த்தனர்
- முற்சங்கம் - 4440 ஆண்டுகள் செயல்பட்டது. முற்சங்கத்தில் - காஞ்சின வழுதிய முதலாக கடுங்கோன் ஈராகப் பாண்டிய மன்னர் 89 பேர் சங்கத்தை வளர்த்து வந்தார்கள்
- முற்சங்க காலத்தில் இயற்றப்பட்ட நூல் - அகத்தியம் ஒன்றே.
- சங்கம் வளர்த்த பாண்டியர்களின் தலைநகரான மதுரை என்ற பெயரே வடமொழிச்சொல்
- இடைச்சங்கம் தோன்றி வளர்ந்தது - கபாடபுரம். இடைச்சங்கத்தில் - வெண்டேர்ச்செழியன் முதலாக முடத்திருமாறன் ஈறாக 59 பாண்டிய மன்னர்கள் இச்சங்கத்தில் பணியாற்றினர்
- புலவர்கள் - அகத்தியனார், தொல்காப்பியனார், இருந்தையூர்க் கருங்கோழியார், மோசியார், வெள்ளுர்க்காப்பியனார், திரையன் மாறனார் முதலான 59 புலவர்கள் வீற்றிருந்தனர்.
- கடைச்சங்கம் செயல்பட்ட இடம் - உத்தம மதுரையில் ∴இன்றைய மதுரையில் ∴'வடமதுரை"
- கடைச்சங்கப் புலவர்கள் 49 பேர். சேந்தம் பூதனார், அறிவுடையரனார், பெருங்குன்றூர்க் கிழார், இளந்திருமாறான், மதுரையாசிரியர் நல்லந்துவனார், மருதநில நாகனார், கணக்காயனார் மகன் நக்கீரனார் முதலானோர் ஆவர்.
- கடைச்சங்க காலம் - 1850 ஆண்டுகள் செயல்பட்டது
- கடைச்சங்க காலத்தில் நெடுந்தொகை, குறுந்தொகை, நற்றினை, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, கலி நூற்றைம்பது, பரிபாடல் எழுபது, கூத்து, வரி, சிற்றிசை, பேரிசை முதலியன எழுதப்பட்டது
- மூன்று சங்கங்களின் மொத்த காலம் - 9990 ஆண்டுகள்
- கடைச்சங்கத்தை மதுரையில் நிறுவியவன் - முடத்திருமாறன்
- கடைச்சங்கத்தின் கடைசி மன்னன் - உக்கிரப்பெருவழுதி
- தொல்காப்பியர் - இடைச்சங்கத்தில் வாழ்ந்தவர்
- இலங்கையின் வரலாற்றைக் கூறும் நூல் - மகாவம்சம்
- கடைச்சங்கம் ∴ மூன்றாம் சங்கத்தின் காலம் - கி.மு. 500 - கி.பி. 500 வரை
- திருஞானசம்பருந்தரும், திருநாவுக்கரசரும் முதலாம் நரசிம்மவர்மன் காலத்தில் வாழ்ந்தவர்கள் (630-660)
- மாணிக்கவாசர் (792- 835) வரகுணப்பாண்டியனின் சமகாலத்தவர்
- சிங்கள மன்னன் கயவாகுவும், சேரன்செங்குட்டுவனும் - சமகாலத்தவர்கள்
- தமிழகத்தில் அதிகம் கிடைக்கும் ரோம நாணயங்கள் - அகஸ்டஸ், டைபீரியஸ் கால நாணயங்கள்
- புதுச்சேரிக்கு அண்மையில் அமைந்துள்ள ஒரு மண்மேட்டுக்கு அரிக்காமேடு என்று பெயர்
- புதுச்சேரியை யவனர்கள் 'பொதுகெ" என்றழைத்தனர்

- அகநானூற்றைத் தொகுத்தவர் - உட்பூரிக்கிழார் மகன் உருத்திரசன்மனார்
  அகநானூற்றைத் தொகுப்பித்தவன் - பாண்டியன் உக்கிரபெருவழுதி
- குறுந்தொகையைத் தொகுத்தவர் - பூரிக்கோ
  குறுந்தொகையைத் தொகுப்பித்தவன் - அறிந்தற்கில்லை
- நற்றிணையைத்(400 வெண்பா) தொகுத்தவர் - அறிந்தற்கில்லை
  நற்றிணையைத் தொகுப்பித்தவர் - பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி
- புறநானூற்றைத் தொகுத்தவன் , தொகுப்பித்தவர் பெயர் தெரியவில்லை
- ஐங்குறுநூற்றைத் தொகுத்தவர் - கூடலூர்கிழார்
  ஐங்குறுநூற்றைத் தொகுப்பித்தவர் - யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை
- பதிற்றுப்பத்தை தொகுத்தவன், தொகுப்பித்தவன் - அறிந்தர்கில்லை முதல் பத்தும் கடைசிபத்தும் கிடைக்கவில்லை இடைப்பட்ட எட்டு பத்துக்கள் மட்டுமே கிடைத்துள்ளன
- சங்க இலக்கியங்கள் யாவற்றிலும் காலத்தால் பிற்பட்ட நூல் - கலித்தொகை
- பரிபாடலைத் தொகுத்தவர், தொகுப்பித்தவர் பெயர் மறைந்து விட்டன.
- நெடுநெல்வாடையின் ஆசிரியர் - நக்கீரர்
- பெரும்பானாற்றுப்படையின் பாட்டுடைத் தலைவன் - சோழன் கரிகாலன்
- நெடுநெல்வாடையின் பாட்டுடைத்தலைவன் - தலையாளங்காணத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்
- மலைப்படுகாடமின் ஆசிரியர் - நன்னன்
- முல்லைப் பாட்டின் ஆசிரியர் - காவிரிப்பூம்பட்டினத்து பொன் வணிகனார் மகன் - நப்பூதனார்
- பத்துப்பாட்டுச்செய்யுளில் பிற்சேற்கை.∴ பத்துப்பாட்டில் இறுதியாகச் சேர்க்கப்பட்டது- திருமுருகாற்றுப்படை
- தமிழில் தோன்றிய முதல் இலக்கண நூல் ∴தமிழ் இலக்கண நூல்கள் யாவற்றிலும் பழமையானது - தொல்காப்பியம். (கி.மு. 4 ம் நூற்றாண்டில் தோன்றியது எனலாம்)
- கீழ்க்கணக்கு நூல்கள் - 18ம் - சங்கம் மருவிய நூல்களாகும்
- சேரமான் கணைக்கால் இரும்பொறையை, கோச்செங்கணான் சோழன் கழுமலம் போரில் வென்று குடவாயிற் கோட்டத்தில் சிறைவைத்தான் - , சிறையில் சேரமன்னன் நாவரண்டு நீர்கேட்க, நீர் கொடுக்கக் காலம் தாழ்த்தியதால் நீர் அருந்த மறுத்து குடவாயிற்கோட்டத்திலேயே உயிர் நீத்தான்.
- பதினென்கீழ்கணக்கு தொகுப்பில் முதலிடம் பெற்ற நூல் - திருக்குறள் ∴ முப்பால்∴ தமிழ்மறை
- திருக்குறளானது இல்லறம், மகளின் கற்புத்திறத்தையும் சிறபித்துப் பேசுகிறது
- சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதியவர் - அடியார்க்கு நல்லார்
- மணிமேகலையின் ஆசிரியர் - கூலவணிகன் சீத்தலை சாத்தனார்(மதுரைக் கூலுவணிகன் சாத்தான், தண்டமிழ் சாத்தான்)
- இளங்கோவடிகளை, சீத்தலைசாத்தனார் என்பவர் சிலப்பதிகாரத்தை இயற்ற வேண்டினார்
- சிலப்பதிகாரத்தை இயற்றியவர் - இளங்கோவடிகள்
- பதிற்றுப்பத்தில் 5ம் பத்துக்குப் பாட்டுடைத் தலைவன் - சேரன் செங்குட்டுவன்
- இலங்கையில் பத்தினி (கண்ணகி) வழிபாட்டை தொடங்கி வைத்தவன் - கயவாகு . இலங்கை மக்கள் ஆடிதோறும் கொண்டாடுவர் அவ்விழாவுக்கு இலங்கையில் 'பிரிஹரா" என்றால் பிரகாரம் என்று பொருள்
- சிலப்பதிகாரத்தின் ஆசிரியரான இளங்கோவடிகள் ஒரு சமணத்துறவி
- பௌத்தக் கொள்கையைத் தமிழகத்தில் பரப்பும் நோக்குடன் இயற்றப்பட்ட நூல் - மணிமேகலை
- மதுரையில் தமிழ்ச்சங்கம் (திரமிள சங்கம்)நிறுவியவர் - கி.பி. 470 ல் வஜ்ஜிரநந்தி
- சங்கம் மருவிய நூல்கள் - சிலப்பதிகாரம், மணிமேகலை
- சிலம்பு முன்னதாகவும் மேகலை பின்னரும் இயற்றப்பட்டிருக்க வேண்டும் . கி.பி. 6ம் நூற்றாண்டு என்பது பொதுவானக் கருத்து
- பத்துப்பாட்டில் அகமும் புறமும் விரவிவந்த நூல் - நெடுநெல்வாடை
- திருமுருகாற்றுப்படை பாடியவர் - நக்கீரர்
- பொருநராற்றுப்படை பாடியவர் - முடத்தாம கண்ணியர்
- சிறுபாணாற்றுப்படை பாடியவர் - நல்லூர் நத்தத்தனார்

- பெரும்பாணாற்றுப்பாடை பாடியவர் - கடியலூர் உருத்திரங்கண்ணனார்
- மலைபடுகடாம் கூத்தாற்றுப்படை- இரணிய முட்டத்துட் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனால் பாடப்பட்டது
- பட்டினப்பாலையின்ஆசிரியர் - கடியலூர் உருத்திங்கண்ணனார்(புகாரின் சிறப்பு, கரிகாலனின் வீரம், வெற்றி, சோழநாட்டு வளம் பற்றி கூறுகிறது)
- ‘இயற்கை வரலாறு’ நூலை இயற்றியவர் - பிளினி கி.பி. 77
- உலகின் வரைபடம் என்ற நூலை எழுதியவர் - டாலமி கி.பி. 150ல் வெளியானது
- சங்க காலம் கி.மு. 500 ல் தொடங்கி கி.பி. 300 வரை செயல்பட்டது என்பதே பொருத்தமாகும்(கி.மு. 300- கி.பி. 300)
- நெடுநெல்வாடை, மதுரைக்காஞ்சி இவற்றின் பாட்டுடைத் தலைவன் - தலையாளங்கானத்து செருவென்ற நெடுஞ்செழியன்
- பொருநராற்றுப்படை, பட்டின்பாலை இவற்றின் பாட்டுடைத்தலைவன் - கரிகாலன்
- சிறுபாணாற்றுப்படையின் பாட்டுடைத்தலைவன் - ஓய்மாநாட்டு நல்லியகோடன்
- பெரும்பாணாற்றுப்படையின் பாண்டுடைத்தலைவன் - தொண்டைமான் இளந்திரையன்
- மலைபடுகடாம் பாட்டுடைத்தலைவன் - நன்னன்
- கலிங்க நாட்டு காரவேலன் கட்டாக் அருகிலுள்ள உதயகிரியில் யானைக்குகை கல்வெட்டு ∴ அதிகும்பா கல்வெட்டு செதுக்கபட்டுள்ளது. இக்கல்வெட்டில் 11வது வரி இவனது 11ம் ஆட்சியாண்டில் இது செதுக்கப்பட்டது என கூறுகிறது. இவன் திரமிளதேச கங்காதம் என்ற தமிழ்வேந்தர் கூட்டணிப் பணியை கி.மு. 165ல் வென்றதாக கூறுகிறது
- கடைச்சங்கம் நிறுவப்பட்ட மதுரை அக்காலத்தில் ‘கூடல்” என்றே அழைக்கப்பட்டது
- சேரன் செங்குட்வனின் சமகாலப் பாண்டியன் - ஆரியப்படைக்கடந்த நெடுஞ்செழியன்
- கடைச்சங்க புலவர்களை ஆதரித்த கடைசி பாண்டிய மன்னர் - உக்கிரப்பெருவழுதி
- தாலமி கி.பி. 2ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்
- தொல்காப்பியம் எழுதப்பட்ட காலம் - கி.மு. 4ம் நூற்றாண்டு
- தொல்காப்பியரின் சீடர் - பனம்பாரனார்
- தொல்காப்பியர் ஓர் சமணர் என்றும் சிலர் குறிப்பிட்டுள்ளனர்.
- முற்சங்கத்தை நிறுவியவன் - பாண்டியன் மாகீர்த்தி, நெடியோன், வடிவலம்ப நின்ற பாண்டியன்
- மூன்றாம் சங்கத்தைப் போற்றிய பாண்டியன் - உக்கிரப்பெருவழுதி
- சங்க கால சேரர்களில் முதல் மன்னன் - உதயஞ்சேரலாதன் ∴ பெருஞ்சோற்றுதியன்
- உதயஞ்சேரலாதனைப் பற்றி பாடியவர் - குமட்டூர் கண்ணனார்
- குடபுலம் என்பது - சேரநாடு
- குணபுலம் என்பது- சோழநாடு
- தென்புலம் என்பது - பாண்டியநாடு
- சேரர்களின் பேரூர்கள் - கருவூர், தொண்டி, நறவு, மாந்தே, வஞ்சி
- உதயன் சேரலாதன் வழி வந்தவர்கள் தலைநகர் - வஞ்சி
- இரும்பொறை வழி வந்தவர்கள் தலைநகர் - கரூர்
- உதயஞ்சேரலாதனின் மனைவி - நல்லினி
- நல்லினியின் மகன் - இமயவரம்பன் நெடுஞ்செழியன், பல்யானைச்செல்கழுக்குட்டுவன்
- பாரதப்போரின்போது கௌரவப் பாண்டப்படைகட்கு உணவு வழங்கியவன் - பெருஞ்சோற்றூதியன்
- பாரதப்போர் காலத்தில் வாழ்ந்தவன் - உதயன்சேரலாதன்
- பதிற்றுபத்தில் மறைந்து கிடக்கும் முதற்பத்தின் பாட்டுடைத்தலைவன் - உதயஞ்சேரல்
- பதிற்றுபத்தில் கூறப்படும் இரண்டாம் பத்தின் பாட்டுடைத்தலைவன் - இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்
- கரிகாலனுடன் போரிட்டு புறப்புண்பட்டு வடக்கிருந்து உயிர் துறந்தவன் - உதயஞ்சேரலாதன்
- சேரநாட்டின் வடபாகம் - குட்டநாடு என்னும் , தென்பாகம் - குடநாடு என்றும் அழைக்கப்பட்டது. காலப்போக்கில் பொறைநாடு, கடுங்கோ நாடு, பூழிநாடு என்ற பிரிவுகள் தோன்றியது
- சேரர்களின் தலைநகர் - வஞ்சி, கரூர்
- சேரர்களின் துறைமுகம் - தொண்டி, முசிறி
- சேரர்களின் கொடி - விற்கொடி

- சேரர்களின் பூ - பனம்பூ

TNPSC –PG TRB

WE SELL WORDS FILE MATERIALS

TO ALL COACHING CENTER

TO ALL BOOK PUBLICATION

REMAING WORDS MATERIALS